[29th October 1962

காரணத்தால் தான் அந்த மின்சார போர்டிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் போனஸோ, சம்பள உயர்வோ கொடுக்க முடியவில்லை என்பதை அரசாங்கம் உணருமா? அப்படி உணர்ந்தால், வட்டி விகிதத்தை குறைத்து, மின்சார போர்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : போர்டுக்கு சர்க்கார் 118 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இந்த 118 கோடி ரூபாயை வெளியிலிருந்து கடன் வாங்கித்தான் சர்க்கார் போர்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். வெளியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறது என்றால் மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கியும், நாம் டிபெஞ்சர் ரெயில் பண்ணியும் இந்தப் பணத்தை வாங்கியிருக்கிறோம். அதற்கெல்லாம் 4½ சத விகிதம் வட்டி சர்க்கார் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதற்கு மேலே ¾ சத விகிதம் அல்லது ஒரு சத விகிதம் வைத்து, 5¼ சத விகிதத்திற்கு நாம் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் வட்டியைக் குறைக்க முடியாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

4-00 p.m. **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்குவதைப் பற்றியோ மற்றதைப் பற்றியோ நான் சொல்லவில்லை. மின்சார போர்டுக்கு 'காபிடல்'-ஆக மாற்றும் சமயத்தில், மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு எல்லாம் தொகை போட்டு அதற்காக வட்டியை வசூலிக்கிறார்களா? அப்படி வசூலிக்கிற பணமாக இருந்தால், அதையாகிலும் சர்க்கார் ரத்து செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 1957-ம் ஆண்டு இந்த மின்சார போர்டுக்கு 'காபிடல்' எல்லாம் மாற்றிக் கொடுக்கப்பட்ட போது, 71 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது. அதற்கு வட்டி சர்க்கார் கொடுக்க வேண்டித்தான் இருக்கிறது. அதனால் போர்டிலிருந்து வட்டி வாங்குகிறோம்.

பிற்பட்ட வகுப்பினருக்கு வீட்டு வசதி

* 837 கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதித் திராவிடர்களுக்கு செய்து தரப்படும் வீட்டு வசதி போல் மற்ற பிற்பட்ட இனத்தவர்களுக்கு 50 சத விகிதம் வாங்கிக் கொண்டு வீடு கட்டிக் கொடுக்கும் வகையில் திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி : ஷெட்யூல்டு வகுப்பினரைப் போலவே மிகவும் பிற்போக்கான மக்கள் கிராமங்களிலே மனைக்கட்டு கோரும் போது, அவர்கள் கோரும் மனைக்கட்டுக்காக கொடுக்க வேண்டிய தொகையின் விலையில் பாதிப் பணத்தை அரசாங்கம் அவர்களுக்கு கொடுத்து உதவ முன்வருமா?

29th October 1962]

கனம் திரு. பூ. கக்கன்: வீடு கட்டும் திட்டம் குறிப்பாக ஹரிஜன நல இலாக்காவால் நடத்தப்படுவதில் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள், டீ-நோடிபைட் மக்கள்—இப்படிப்பட்டவர்களுக்காகத்தான் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. பின் தங்கிய மக்களுக்காக விலேஜ் ஹௌஸிங் ஸ்கீம் இருக்கிறது. அதிலேயிருந்து இவர்களுக்கு வீடுகள் கிடைக்கும்.

திருமதி டி. என். அனந்தநாயகி: சென்னையில் ஹரிஜனங்களுக்காக சேரிகளில் வீடுகள் கட்ட வேண்டுமென்று திட்டங்கள் உருவாக்கப்பட்டும்கூட, இன்னும் ஒரு திட்டம்கூட அமுலாக்கப்படவில்லை என்று கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அப்படியென்றால், எப்பொழுது அமுலாக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன்: சென்னை நகர ஹௌஸிங் போர்டு ஸ்லம் இம்ப்ருவ்மென்டு ஸ்கீம் மூலமாக வீடுகள் கட்டப்படுகின்றன.

Sri K. V. SWAMINATHAN: Will the Hon. the Minister consider the desirability of extending these facilities to some of the most backward communities such as washermen, barbers and also moopanars?

The Hon. Sri P. KAKKAN: We addressed the Government of India but they did not accept.

திரு. கோ. சி. மணி: ஆதித் திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு மனையும், வீட்டு வசதியும் ஏற்பாடு செய்து தருவதாகச் சொல்லும் கனம் அமைச்சர் அவர்கள் தேவஸ்தானத்திற்கு சொந்தமான நிலம் இருந்தால், அதை ஆதித் திராவிடர்கள் தங்களுக்கு வேண்டுமென்று கேட்டால், அதை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க முன்வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: கோயில் நிலமாக இருந்தாலுங்கூட, அங்குள்ள ஜனங்கள் அந்த இடத்தை வீடு கட்டிக் கொள்வதற்காகக் கேட்டால், அதுபற்றிப் பரிசீலனை செய்து, எடுத்துக் கொடுத்து வீடு கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

Schools

* 838 *Q.*—**Sri S. MADHAVAN:** Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of high schools opened; and

(*b*) the number of higher elementary schools raised to high schools in 1961, district-war?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: A statement [a] is placed on the Table of the House.

* 839 **கேள்வி.—திரு. முனு. ஆதி:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை-தேனாம்பேட்டைக்கு அருகில் அரசாங்கமே ஓர் உயர்நிலைப்பள்ளி துவக்கி நடத்தும் உத்தேசமுண்டா?

---

a Printed as Appendix II on pages 107–108